ஓம் சரவண பவ

ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து ஓங்காரக்குடிலுக்கும் உயர் தொண்டர் பெருமக்கட்கும் உலக மக்களுக்கும் பொது அறிவுரை ஆசி நூல்

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி அறிவுரை நூல்**

20.07.2024

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுக அரங்கமகா ஞானியர் யானும்
பெருமைபட குரோதி ஆண்டு
நள்ளி திங்கள் ஆடித் திங்களில்

2. கூறிடுவேன் பிரணவக் குடிலுக்கும்
உயர் தொண்டர் பெருமக்கட்கும்
உலக மக்கட்கும் இனிதே அறிவுரை ஆசி விளக்கத்தை
இயம்பிடுவேன் அரங்கன் யான் இதுகாலம்

3. காலமதும் ஓங்காரக்குடிலில்
கருணைபட அரங்கன் யான்
தொடர் தருமத்தை பெருமைபட
உலகமெங்கும் தர்மம் வளரவே

4. புண்ணிய வழிகாட்டி அருளி நிற்கின்றேன்
ஆகவே ஓங்காரக்குடிலின் தர்மம்
எக்காலமும் உயர்வுபட இன்னும்
வளர்ந்தோங்கி அன்பர்கட்கு இன்னும்

5. தர்மசிந்தை வளரும் வண்ணம்
மேன்மையும் அன்பர்களிடையே வளர்ச்சியும்
தர்மத்தில் தொடர்பு கொள்பவர்களுக்கு
தக்கபடி அருள்பொருள் வளமோடு

6. அனைத்து பலமும் ஆரோக்கியம்
ஆயுள் கீர்த்தி அவர்கள் வேண்டி
விரும்பி வருகின்ற சர்வபலமும் சித்திக்க
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு

7. ஆசி தந்தேன் கருணைபட
அரங்கன் என் தொண்டிலே
கடைத்தேற்றும் வண்ணம்
உயர்வாக சரணாகதி கொண்டு

8. தொண்டாற்றுகின்ற ஓங்காரக்குடிலின்
தொண்டர் பெருமக்களும் அரங்கன் என்
ஆசிக்கும் ஆற்றல்மிக்க கருணைக்கும்
உரியவர்களாக அன்னவர்களின்

9. ஆரோக்கியமும் பயண பாதுகாப்போடு
சர்வ பாதுகாப்பும் கூட்டி அரங்கன் யான்
இந்தவித நன்னாளில் ஆற்றல் கூடிட
ஆசி அருளுகின்றேன் அச்சமற ஓங்காரக்குடிலின்

10. என் தொண்டர் பெருமக்கள்
உலகமெங்கும் தேடினாலும் இந்தவித
சரணாகதி கொண்ட குரு விசுவாசம் கொண்ட
தொண்டர் பெருமக்களை அறிய முடியாது

11. அன்னதனால் என் சீடர் பெருமக்களெல்லாம்
ஆறுமுகப் பெருமான் ஆசியோடு
அரங்கன் என் சூட்சுமமான தயவோடு
இந்த கலியுகத்தில் ஞானப்பெருவாழ்வு கண்டு

12. இனி பிறவாத பெரும்பேற்றுக்கு
தகுதி கொண்டவர்களாவர்
ஆகவே உயர் தொண்டர் பெருமக்களான
அன்பர்கள் இவர்களெல்லாம்

13. அரங்கன் என் ஆசியோடு
ஆற்றல்பட அருள்பொருள் வளமோடு
ஞானவழி சிறந்தும் இவர்கள் வம்சா வழிவழி
அன்பர்களெல்லாம் அரங்கன் என் தொண்டர்களாக

14. இந்த கலியுகத்தில் சிறந்து இனிதே
ஞானவான்களாக தொடர் தொண்டு ஓங்காரக்குடிலில்
பூரண சரணாகதியோடு தொடர்ந்து
ஓங்காரக்குடிலின் தர்மத்தை பாதுகாத்து வளர்த்து

15. உயர்வான அரங்கன் என் சன்மார்க்கத்தை
உலகமெல்லாம் கொண்டு செல்லும்
அங்கத்தினர்களாக அன்பர்களாக
உயர் சீடர்களாக சிறந்து விளங்க

16. அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
ஆசி தந்தேன் ஓங்காரக்குடில் நோக்கி

உலக மக்களெல்லாம் அணுகி
வருகின்ற காலம் கனிந்து வர

17. இனிதே அவ்வாறு தேடி வருகின்ற
அன்பர் பெருமக்கட்கெல்லாம்
இயம்பிடுவேன் அரங்கன் என்
பரிபூரண பாதுகாப்பும் ஆசியும் உண்டு உண்டு

18. அவர்கட்கெல்லாம் வேண்டி வருகின்ற வண்ணம்
விரும்பிய காரியங்கள் அத்துணையும்
சித்திக்கவும் வெற்றி உண்டு
அவர்கள் இன்னும் உலகமெங்கும்

19. அரங்கன் என் புகழை
கொண்டு செல்லவும் அரங்கன் யான்
அருள் செய்து அவர்கட்கு
வழிகாட்டி வகை செய்வேன்

20. செய்யவே ஓங்காரக்குடில் சித்திமிகு
ஆற்றலை தருகின்ற ஆரோக்கியம் அருளுகின்ற
அருளமுதோடு கூடிய பெருமைமிக்க
சன்மார்க்கத்தை விதைத்து

21. பேருலகமெங்கும் ஞானத்தை பரப்புகின்ற
ஞானசபையாகும் இச்சபைக்கு வர
உலகோர்க்கு பிறவித் தொடர்பு வேண்டும்
அச்சமற அரங்கன் என் குடில்நாடி

22. அருளமுதில் உதவி மெச்சவே
தொண்டும் செய்து மேலான
சீடர்களாக உலகோர் மாறிவிட்டால்
அவர்கட்கெல்லாம் கலியின் இடர்களோ

23. கலியுகத்தில் வருகின்ற சிக்கல்களோ
பிரச்சனைகளோ துன்பங்களோ
அணுகாத வண்ணம் பெரும்பாதுகாப்பு கூடி
பேரானந்த கதியெனும் ஞானிகள் அடைந்த

24. ஆற்றல்மிக்க அந்த ஞானவாழ்வை அடைந்து
வரும் மக்களெல்லாம் ஞானிகளாக மாறுவர்
என்று கூறி அரங்கன் யான் இந்தவித நன்னாளில்
அருளிய பொது அறிவுரை ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–